திரு. என். எஸ். வி. சித்தன் : இதுமாதிரி தற்காலிகமாக வேலை செய்தவர்களது பணிக்காலத்தையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்வதன் காரணமாக அரசாங்கத்திற்கு எவ்வளவு அதிகப் பணம் செலவாகிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பென்ஷன் கணக்கு அவ்வப்போது ஓய்வூதியத்திற்கு அருகதை உடையவர்களாக ஆகின்றவர்களைப் பொறுத்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) வினாக்களை விடையளிக்க எடுத்துக் கொள்ளாதது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்தச் சட்டசபை ஆரம்பித்ததில் இருந்து பல கேள்விகளை நான் அனுப்பி இருக்கிறேன். ஒரு கேள்வி கூட இதுவரை வரவில்லை. கேள்வி போட்டு கூட்டுத் தொடர் முடிந்த பிறகு அவற்றைப் புதுப்பிக்க வேண்டுமென்றும் எழுதியிருக்கிறேன். ஒரு கேள்வி கூட இது வரை வராததற்குக் காரணம் என்ன ? சிறு கட்சி என்பதற்காக கேள்வி வராமல் இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. கொடுத்த கேள்வி வரவில்லை என்றால் பேரவைத் தலைவருடைய அறையில் வந்து கேட்க வேண்டும். இதிலே பெரிய கட்சி, சிறிய கட்சி என்று பார்ப்பது இல்லை. கேள்விகள் அனுமதிக்கப்பட்டவுடன் அமைச்சர்களின் இலாகாக்களுக்கு அனுப்பப்படுகின்றன. அங்கிருந்து விடைகள் சட்டமன்ற அலுவலகத்திற்கு வந்தவுடன் அந்தக் கேள்விகள் அவைக்கு வரும்படி ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இவ்வளவு கேள்விகள் அமைச்சர்களிடம் இருக்கின்றன. விரைவில் பதிலை அனுப்ப வேண்டுமென்று ஒவ்வொரு அமைச்சருக்கும் தனித் தனியாக அலுவலகத்திலிருந்து எழுதப்படுகிறது. வந்தவுடன் இந்த அவைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லை. திரு. அழகர்சாமி அவர்கள் கொடுத்த கேள்விகளில் 22 கேள்விகள் புதிய கேள்விகள், நான்கு கேள்விகள் புதுப்பிக்கப்பட்ட கேள்விகள். மொத்தம் 26. அனுமதிக்கப்பட்டவை 17; ஐந்து கேள்விகள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. நான்கு கேள்விகள் உறுப்பினர் அவர்களுக்கு விளக்கம் கேட்டு திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றன. எதற்கும் விடை வரவில்லை. விடை வாராத காரணத்தால் அவைக்கு வரவில்லை.